# புதுச்சேரி அரசு
# வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை
## தட்டாஞ்சாவடி
## புதுச்சேரி
******

**பத்திரிக்கை செய்தி**

மத்திய அரசாங்க நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், எண்ணைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் 50 சத மானியத்தில் ரூ85,000 (ரூபாய் என்பத்தைந்தாயிரம் மட்டும்) மிகாமல் 5 ஆத்மா குழுக்கள் (CIG) அல்லது பெண்கள் உணவு பாதுகாப்பு குழுக்களுக்கு நடப்பு நிதியாண்டில் வழங்கப்பட உள்ளது. அதே போல், 100 சத மானியத்தில் செயல் விளக்க அடிப்படையில் ஹைட்ரோ போனிக்ஸ் முறையில் தீவனப்புல் வளர்ப்பதற்க்கு தகுதியான கால்நடை வளர்ப்போர் ஆத்மா குழுக்கள் / பெண்கள் உணவு பாதுகாப்பு குழுக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதியுள்ள ஆத்மா குழுக்கள்/பெண்கள் உணவு பாதுகாப்பு குழுக்கள், அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் உழவர் உதவியகத்தை அணுகி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது. மேலும் வேளாண் துறை இணையதளம் https://agri.py.gov.in என்ற முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்திசெய்த விண்ணப்பங்களை அந்தப்பகுதியில் உள்ள வேளாண் உழவர் உதவியகத்தில் ஜனவரி 10-ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதிகப்படியான விண்ணப்பங்களை பெறும் பட்சத்தில் பயனாளிகள்! குழுக்களை, குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படும் குழுக்கள் இரண்டு மாதங்களில் எண்ணை பிரித்தெடுக்கும் இயந்திரத்தை நிறுவி அதற்குண்டான ரசிதுகளை இணைத்து மானியத்தொகைப் பெற விண்ணப்பிக்க வேண்டும். கள ஆய்விற்குப் பிறகு, மானியத் தொகையானது குழுவின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும்

12/12/19

**கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகம் (ப.வ.தொ.தி)**
**தட்டாஞ்சாவடி**